


# ஆயர் மடல்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

இறைமகன் இயேசுவின் திருப்பெயரில் நல்வாழ்த்துக்கள். ஒரு புதிய மாதத்தில் பிரவேசிக்கச் செய்திருக்கிற கடவுள்தாமே நம்மை கரம்பிடித்து நடத்துவாராக.

## வாலிபர் ஞாயிறு மற்றும் சிறப்பு கூடுகை

கடந்த 11.06.2023 ஞாயிறு அன்று வாலிபர் சிறப்பு ஞாயிறு நமது ஆலயத்தில் கடவுளுக்கு மகிமையாக சிறப்பாக நடைபெற்றது. கடவுளுக்கு முதலாவதாக நன்றியை ஏறெடுக்கிறேன். இளம் வாலிபர் (Teens), வாலிபர் (Youth) சுமார் 70 பேர் கலந்து கொண்டு இறையாசி பெற்றனர். வழிபாட்டில் இறைசெய்தி கொடுத்து, வாலிபர் கூடுகையை நடத்திக் கொடுத்த **திரு. ஜான் ஜோசப்** அவர்களுக்கு என் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். சிறப்பான ஆயத்தப் பணிகளை செய்து பிள்ளைகள்பெருமளவில்பங்கேற்கபெருமுயற்சிகள்எடுத்துக்கொண்ட பொறுப்பாளர்கள் அனைவருக்கும் என் பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கிறேன். பங்கேற்ற பிள்ளைகளுக்கும், ஊக்கப்படுத்தி அனுப்பிவைத்த பெற்றோர்களுக்கும் என் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். பங்கேற்ற பிள்ளைகள் தொடர்ந்து ஐக்கிய சங்க கூடுகைகளில் கலந்துகொள்ள அன்புடன் அழைக்கிறேன்.

## கன்வென்ஷன் கூட்டங்கள்

கடந்த 17.06.2023 சனிக்கிழமை மாலை மற்றும் 18.06.2023 ஞாயிற்றுகிழமை காலை மற்றும் மாலை - வழிபாடு மற்றும் கன்வென்ஷன் கூட்டங்களில் கடவுளுடைய செய்தியை பகிர்ந்துகொண்ட **திரு. D. கிறிஸ்டோபர் தாமஸ்** அவர்களுக்கு என் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். பங்குபெற்று இறையாசி பெற்ற அனைவருக்கும், பாடல் நேரத்தை வழிநடத்திய அன்பர்களுக்கும், பொறுப்பாளர்களுக்கும் என் பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

# நற்செய்தி பெருவிழா – 2023

வருகின்ற 09.07.2023 ஞாயிறு அன்று காலை 8.30 மணி வழிபாடு நற்செய்தி பெருவிழா வழிபாடக நடைபெறும். அனைவரும் உற்சாகத்தோடு கலந்து கொள்ள அன்புடன் அழைக்கப்படுகிறீர்கள். தொடர்ந்து காலை சிற்றுண்டி, பலகார விற்பனை நடைபெறும். அனைவரும் இணைந்து இவ்விற்பனை விழாவில் கலந்துகொண்டு பங்களிக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். சிறப்பு காணிக்கை கவர்களில் உதாரத்துவமான காணிக்கைகளை படைக்க அன்புடன் அழைக்கிறேன்.

திரியேகக் கடவுள் உங்கள் அனைவரையும் ஆசிர்வதிப்பாராக. ஆமென்.

**இறைபணியில் உங்கள்,**

**ஆயர்**




# நற்செய்தி பெருவிழா

## சி.எஸ்.ஐ. வெஸ்லி தமிழ் ஆலயம்,

### தூய தோமையார் மலை

### நாள் : ஜூலை 9, ஞாயிற்றுக்கிழமை

“உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்”. மாற்கு 16:15.



# திருமறைக்குத் திரும்புவோம்

**..... "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்". - மாற்கு *16:15.***

ஒரு தம்பதியினருக்கு திருமணமாகி பலவருடங்கள் ஆகியும் பிள்ளையே இல்லை. பதினைந்து ஆண்டுகள் கழித்து இறைவன் அருளினால் அந்த தம்பதியினருக்கு ஒரு குழந்தை பிறந்தது. அவர்களுக்கு சொல்லி முடியாத மகிழ்ச்சி. ஆனந்தத்தில் மூழ்கிப் போனார்கள். இந்த குழந்தை பிறந்த செய்தியை சிறப்பாக கொண்டாட இவர்கள் நினைத்து தங்கள் உறவினர்களுக்கும் மற்றவர்களுக்கும் இவர்கள் பெற்ற நற்செய்திதனை தெரிவித்து மிக்க மகிழ்ச்சியுடன் கொண்டாடினார்கள்.

இயேசு சீடர்களை நோக்கி, உலகமெங்கும் போய்ப் படைப்பிற்கெல்லாம் நற்செய்தியினை அறிவியுங்கள் என்றுரைத்தார்.

கடவுள் தாமே இயேசு என்ற பெயரோடு ஒரு மனிதனாக இந்த உலகத்திற்கு வந்தார். மக்கள் நிறைவான வாழ்வைப் பெறும்படி வந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்து அதை அடிப்படையில் செயல்படுத்தித் தொடர்ந்து செய்யும்படி தம் சீடர்களுக்கு அன்பு கட்டளையிட்டார். பேய்களையெல்லாம் அடக்கவும், நோய்களைக் குணமாக்கவும் வல்லமையும் அதிகாரமும் அவர்களுக்கு அளித்தார். இறையரசைப் பற்றியச் செய்தியை அறிவிக்க, அதற்காக பாடுபட கட்டளையிடுகிறார். தந்தையின் அன்பின் அரவணைப்பிலிருந்து பிரிந்து சென்ற மனிதனை அவரிடம் கூட்டி வருவதே இயேசுவின் தலையாயப்பணி. தந்தையினுடைய அன்பிற்கு சான்று பகரும் வாழ்வினாலும், போதனையாலும், செயல்களினாலும் இதை செய்து வந்தார்.

ஒரு குழந்தை பிறக்காதா என்று ஏங்கி தவித்த நேரத்தில் இறைவன் ஒரு குழந்தையை அப்பெற்றோருக்கு கொடுத்ததுபோல் ஒரு மேசியா வரமாட்டாரா என்று ஏங்கிய நேரத்தில் கடவுள் தன் நேச குமாரன் இயேசுவை நமக்கு தந்தார். இதுவே நமக்கு கிடைத்த நற்செய்தி. நற்பணி செய்வதின் மூலம் நற்செய்தியை சொல்வோமா?

ஆண்டவர் நிறைவான வாழ்வைத் தந்தாரே, அதுபோல் நாமும் நம் குடும்பத்தாரும் எளியவரின் நிறைவான வாழ்வுக்கு பாடுபடுவோமா?

## வழிபாட்டு ஒழுங்குமுறை - ஜூலை 2023

| நாள் | நேரம் | வழிபாடு | அருளுரை தலைப்பு | அருளுரையாளர் |
|---|---|---|---|---|
| 01-07-2023 வியாழன் | காலை 6:30 மணி | மாத முதல் நாள் திருவிருந்து வழிபாடு | - | ஆயர் |
| 02-07-2023 ஞாயிறு | காலை 8:30 மணி | திருவிருந்து வழிபாடு | பொறுப்புடன் வள ஆதார மேலாண்மை செய்யும் பொறுப்புடைமை<br>விடுதலைப் பயணம் 18:13-27<br>2கொரி. 8:1-15 ; மத்தேயு 25:14-30 | ஆயர் |
| | மாலை 6:30 மணி | மாலை வழிபாடு | | ஆண்கள் ஐக்கியம்<br>திரு. ஜான் சாமுவேல் பென்னர் |
| 09-07-2023 ஞாயிறு | காலை 8:30 மணி | நற்செய்தி பெருவிழா காலை வழிபாடு | அனைவருக்கும் நற்செய்தி<br>ஏசாயா 55:1-6<br>தி. ப. 10:34-43 ; மத்தேயு 4:17-25 | திரு. ஐசாயா |
| | மாலை 6:30 மணி | மாலை வழிபாடு | | திரு. தேவ மித்திரன் |
| 16-07-2023 ஞாயிறு | காலை 8:30 மணி | திருவிருந்து வழிபாடு | கிறித்துவின் தூதுவராகும் இறைமக்கள்<br>யோசுவா 1:1-9<br>2கொரி. 5:16-6:10 ; மாற்கு 6:7-13 | ஆயர் |
| | மாலை 6:30 மணி | மாலை வழிபாடு | | பெண்கள் ஐக்கியம்<br>திரு. ஜான் சாமுவேல் பென்னர் |
| 23-07-2023 ஞாயிறு | காலை 8:30 மணி | காலை வழிபாடு | அருட்பொழிவு திருப்பணி<br>எசேக்கியல் 33:1-9<br>1 திமொ. 3:1-33 ; யோவான் 21:15-19 | ஆயர் |
| | மாலை 6:30 மணி | மாலை வழிபாடு | | திரு. தேவ மித்திரன் |
| 30-07-2023 ஞாயிறு | காலை 8:30 மணி | சாட்சியின் ஞாயிறு காலை வழிபாடு | திருமணம்: உடன்படிக்கையின் கொண்டாட்டம்<br>தொடக்கநூல் 2:18-25<br>எபிரேயர் 13:1-6 ; மத்தேயு 19:3-6 | சிறப்பு செய்தியாளர் |
| | மாலை 6:30 மணி | மாலை வழிபாடு | | திரு. ஜான் சாமுவேல் பென்னர் |

## ■ உபவாச ஜெபம்



**நாள் : 01-07-2023**
**சனிக்கிழமை**

**நேரம் : காலை 10 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை**

**பெண்கள் - உபவாச ஜெபம் நடைபெறும்.**

---

## ■ வரவேற்கிறோம்



நமது வெஸ்லி தமிழ் ஆலயத்தில் ஜூன் மாதம் திருமுழுக்கு பெற்று திருச்சபை ஐக்கியத்தில் இணைந்துள்ள கீழ்க்கண்ட கடவுளின் பிள்ளையை திருச்சபையாக வாழ்த்தி வரவேற்கிறோம்.

பெயர் :
***J. ஜோர்டன் ஜோயல்***
நாள் : **11.06.2023**

பெற்றோர் பெயர் :
**ஜோயல் மார்க் ராமசுவாமி**
**சுசன்னா எபினேசர்**

---

## ■ வருந்துகிறோம்



**MR. JOHN WESLEY . J**

நமது சபையின் அங்கத்தினர்
**திரு. ஜான் வெஸ்லி . J**
அவர்கள் **15-06-2023** அன்று
கர்த்தருக்குள் நித்திரை
அடைந்தார்.

**இக்குடும்பாத்தரை தங்கள் ஜெபத்தில் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.**






## 1-Jul

Mr. BATCHA . M
Mrs. RUKMANI . R
Mrs. MARY DEVADOSS
Mrs. VIMALA JESUDOSS
Mr. EDWARD PAUL . D
Mrs. HEMALATHA . K
Mr. ANTONY . J
Mr. KALAISELVAN . G
Ms. RISHA SAMUEL
Ms. JENI PRIYA . J

## 2-Jul

Mr. PRASAD MANOHARAN
Mr. ANDREWS VICTOR . P
Baby NETHRA

## 3-Jul

Mrs. PREMA . G
Mr. JOHNSON . S
Mrs. MARY VIMALA . J
Ms. LEYA JESICCA . A
Mstr. JEREMIAH ROSHAN . R
Ms. JENOLIN . J

## 4-Jul

Mr. VINOD MELVIN . H

## 5-Jul

Mr. PRAFULLA CHANDRA BHATNAGAR
Mr. IMMANUEL . J
Mr. TRUMAN RAJKUMAR
Mr. IMMANUEL MANOJ . S
Ms. DEBORRAH EVANGILINE . B

## 6-Jul

Mr. ABEL DEVA MITHREN
Mrs. MARY
Mrs. ROSELIN FREEDA . G.K
Mrs. ARPUTHAMARY . V
Mrs. NISHA PACKIAM . P
Mrs. ANNIE . A
Mr. BENEDICT JOSEPH . S
Ms. JONATHA LEOMA . A
Ms. HAZEL JESLYN . S

## 7-Jul

Mrs. GNANAM RAJASINGH
Mrs. VIJAYA .S.K
Mr. KUTTIAPPAN . C
Mrs. SANDRA ANGELINE MARIA
Ms. JECINTH JOHANNA . J
Baby HAZEN FIONA . K

## 8-Jul

Mrs. IRENE CHRISTIAN . G
Mrs. SELINA GABRIEL
Mr. DAVID VIMAL SINGH . G
Mrs. SOPHIA
Mr. PRANAV BHATNAGAR

## 9-Jul

Mrs. CHANDRIKA JEYASEKARAN
Mr. PAUL INBARAJ . A
Mr. CHARLES DINESH . C. J

## 10-Jul

Mrs. SAROJNI . P
Mr. JAYASINGH . C
Mrs. BEAULAH
Mrs. SHAKILA FLORENCE . S
Mr. PRADEEP RAJKUMAR
Mr. BHUVANESH KUMAR . A
Ms. SRIMATHI . M
Mr. JOHNSON ANTONY RAJAN . J

## 11-Jul

Mrs. MANJULA .D

## 12-Jul

Mrs. CHANDRA
Mrs. VIJAYA . K
Mrs. PRIYA VASEEGIRI
Mrs. JOSEPHINE SHERIL JOSEPH
Mr. NAVIN JONES RICHARD . C
Ms. NITIKA PRIYAVARSHNI . R

## 13-Jul

Mrs. SELVI . R
Mr. ANAND JEYAKUMAR . D
Mr. SURESH . M
Mrs. IDA SHERLEE . J
Mr. ANISH . T
Mr. ALLAN NITISH . A
Ms. LARISA . M

## 14-Jul

Mr. RAJAN . A. N
Mrs. GLORY . J
Mr. JOSEPH VIJAYA SINGH . S
Mrs. SHANTHI HEMALATHA . M
Mrs. PRADEEPA . Y
Mrs. SANDRA SANTHALAKSHMI
Mr. JAISON . K
Mr. PRAVEEN PREM ANAND . M .E
Baby JOHANAN JOSEPH SAMUEL .S

## 15-Jul

Mr. PRIESTLY DEVAPRASAD . H
Mr. JOHN SELVAM . V
Mrs. JOICE BAVA . N
Mr. IMMANUEL MANOHAR
Mrs. ELIZABETH KANMANI . M
Mrs. SATHYA
Mrs. PREETHI . S
Mr. WINFRED TENNYSON RAJ . J
Ms. DAFFINY INBAKUMAR
Baby ANIQ JOANNQ

## 16-Jul

Mr. SENTHIL KUMAR . V
Mr. JOHN ISAAC . R
Ms. SANGEETHA . P
Ms. ASHIKA PREMA KUMARIE . A . S
Ms. SANTO BRIANA . A

## 17-Jul

Mr. MOSES PREMKUMAR . B
Mr. SENTHIL KUMAR . S
Mr. PREETHAM . S

## 18-Jul

Mr. SUGUMAR . G
Mr. EDWIN BABU
Mrs. ANGELINE . R
Ms. SULOCHANA ELIZABETH PAUL . B

## 19-Jul

Mr. ANAND RAJAN . T
Mrs. ATHMASELVI . A
Mr. IMMANUEL
Mrs. EVELYN SHARON
Ms. SARA SAMUEL . S
Ms. GABRIELLA ANDERSON

## 20-Jul

Mr. ALBERT . S
Mrs. JOYCE THAMARY

Dr. GODWIN RAJESH . W
Baby RYAN ANDERSON

## 21-Jul

Mr. SIROMONI . J.R
Mrs. SUSHILA . C
Mr. VINCENT . P
Mrs. CHRISTI RADHA MANI . A
Mr. PAUL EBENEZER . V
Mstr. JAIRO . A
Mstr. YUVEN ADHVIK . K

## 22-Jul

Mr. JOHNSON . R
Mr. PANDIAN . L
Mrs. TAMILARASI . S.R
Mr. GODWIN . J. B
Mrs. JOTHILIN JESANTHA . M
Ms. NIVITHA . S

## 23-Jul

Mrs. RACHEL ARULRAJ
Mr. MASILAMANI . D
Mrs. MERCY JOHNSON
Mr. BLESSINGTON A
Mr. JAMES PADMANABHAN . K
Mrs. LATHA . A
Mrs. JABASHOBANA . G
Mr. JEREMIAH NIXON . J
MR. FRANKLIN TONY
Ms. MAGDALENE NIKITHA . M

## 24-Jul

Mrs. SAROJINI VICTOR
Mr. KINGSTON
Mr. MARIA DOSS . D
Mrs. JULIET
Mr. EWARDS SHABLINE . S
Mrs. JESINTHA . L
Mr. SIDDARH SELVA RAJAN
Mstr. SAMUEL JASON

## 25-Jul

Mrs. SHOBA JAYAKUMAR
Mr. DEENADAYALA VICTOR . G

## 26-Jul

Mr. SARGUNAM . R
Mr. SELVAKUMAR . R
Mr. NITHYAKUMAR MOSES . B
Mr. MILLAR . A
Baby PEARLYN JOSE

## 27-Jul

Mr. SUNDAR DANIEL
Mrs. DIVYA R. S
Mr. MELVIN JACOB . J
Ms. ANGELIN NAVEENA
Baby RICKY SAMUEL . S

## 28-Jul

Mrs. SHEEBA KUMAR . P
Ms. HELEN KASTHURI . S
Mrs. HELAN . P
Mr. ALEN PAUL . S

## 29-Jul

Mr. PETER JEYASEELAN . S
Mrs. JAYANTHI . M
Mrs. SARAH . T
Mr. JOSEPH DANIEL . E
Mr BABOOL

## 30-Jul

Mrs. JESINA GNANA VERGILIN . B
Mr. SOLOMON PETER . P
Mrs. HELAN CHRISTALIN MERCY . K.J
Mrs. SASIKALA . M
Mr. SELWYAN KARUNAKARAN . J
Mrs. NALINA . S
Baby JAYDEN FLINTOFF . P

## 31-Jul

Mrs. MARY EVANEGELINE
Mrs. SHANTHI . M
Mrs. SALOMINA PUSHPARANI . M
Mr. EDISON . R
Mrs. SOFIA . J
Mrs. RAICHEL JEMIMA . T

# திருமணநாள் வாழ்த்துக்கள்

## 1-Jul

Mr. MICHEAL JAYASINGH . D
Mrs. VASTHI HEMALA MICHAEL

Mr. PAUL MANOHAR . N
Mrs. ESTHER RANI . Y

Mr. VEDHA NAYAGAM . C
Mrs. PREMILA KIRUBAI MANI

Mr. PAULRAJ . Y
Mrs. DHANABACKIYAM . P

## 2-Jul

Mr. PAUL SUBRAMANIAN . M
Mrs. PRASILLA PREMAVATHY . T

Mr. BALA . T
Mrs. ALICE . J

## 4-Jul

Mr. AARON DEVAPRASAD . A
Mrs. ANGELINE . R

Mr. SUDARSAN ABRAHAM . G.N
Mrs. DEEPA .S

Mr. JINO . R
Mrs. HYMA JINO

## 5-Jul

Mr. MASILAMANI . D
Mrs. SHEELA . R

## 6-Jul

Mr. MICHAEL MANOHARAN . D
Mrs. ROSE MARY . M

Mr. VASANTH FERNANDO . R
Mrs. ANU .T

## 7-Jul

Mr. SAMUEL RAJAKUMAR . G
Mrs. NANCY JAYAKUMARI . P

Mr. CHARLES . C
Mrs. PADMAVATHI . C

*Wedding Day*

## 8-Jul

Mr. SWAMINATHAN
Mrs. CHANDRA

Mr. RAJAN . M
Mrs. KAVITHA R

## 9-Jul

Mr. ALWIN FREDRICK
Mrs. HEMALATHA ALWIN . A

Mr. JAYAKARAN JACOB EBENEZER . D
Mrs. PREETHI . S

## 11-Jul

Mr. PETER . D
Mrs. ESTHER SELVAKUMARI . P

Mr. MERVIN VINOTH . T
Mrs. SHAMINI SHERUBA . J

Mr. SOLOMON RAJKUMAR . D
Mrs. SWETHA . P

## 13-Jul

Mr. RAJKUMAR . V
Mrs. DEVASITHAM . A

## 14-Jul

Mr. NITHYAKUMAR MOSES . B
Mrs. ALEXANDRA BAKKIAM AILENE

## 16-Jul

Mr. DAVIDSON RAJESH . P
Mrs. ELIZABETH KANMANI . M

Mr. BENJAMIN VICTOR .G
Mrs. SUNETHA FLORENCE

Mr. NEWTON GLADIAS . J
Mrs. RANJANI . N

Mr. JONATHAN EBENEZER . J
Mrs. REETA JANET JESSY

## 22-Jul

Mr. DAVID VIMAL SINGH . G
Mrs. DEEPALI AUGUSTI . D

# இரத்தசாட்சி - வில்லியம் ஹன்டர் (1535 - 1555)

இயேசுகிறிஸ்துவை இரட்சகராக, பாவமன்னிப்பை அருளுகிறவராக உண்மையான, உயிருள்ள தெய்வமாக மற்றவர்களுக்கு அறிவிக்கும்போது, அறிக்கை செய்யும்போது மிஷனரிகள் கொல்லப்படுவதை, அவர்கள் இரத்தசாட்சிகளாய் மரித்தார்கள் என்று கூறக்கேள்விப்பட்டிருக்கிறோம். இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் எல்லாரும் கிறிஸ்துவை இரட்சகராக அறிவித்த காரணத்தால் அனைவருமே உயிரோடு கொல்லப்பட்டார்கள், ஆப்பிரிக்கா, நியூகினி தீவுகள், ரஷ்யா, சீனா இப்படிப்பட்ட நாடுகளில் இயேசுவை அறிவிக்க சென்ற பலர் அங்குள்ள மக்களால் கொல்லப்பட்டு இரத்த சாட்சிகளாய் மரித்தனர்.

ஆனால் மார்டீன் லூத்தர் கத்தோலிக்க சபையிலிருந்து புராட்டஸ்டன்ட் சீர்திருத்த பிரிவை தொடங்கிய காலத்தில் பலர் வேத புத்தகத்தின் அருமையை, கர்த்தரின் வசனத்தின் வல்லமையை, வசனத்தின் ஆறுதலை ருசிக்கவும் அனுபவிக்கவும் வாஞ்சித்தார்கள். ஆனால் அந்த சீர்திருத்த கால ஆரம்பத்தில் பாரம்பரிய கிறிஸ்தவ கத்தோலிக்க சபையானது கிறிஸ்துவையும், மரியாளையும் மரித்த பரிசுத்தவான்களின் சிலைகளைமட்டும் வணங்கவும், சில கிறிஸ்தவ சடங்காசார முறைகளை பின்பற்றவும் கிறிஸ்தவத்திலேயே சில மூடநம்பிக்கைகளை பின்பற்றவும், கிறிஸ்தவ மத தலைவர்கள் சபை மக்களை கட்டாயப்படுத்தினர். நாட்டின் ஆளுகையும் அவர்கள் கையில்தான் இருந்தது. அவர்கள் கட்டளையின்படிதான் சபைகளும் நடத்தப்பட்டது.

## வேதம் வாசித்ததால் கொல்லப்பட்ட இரத்தசாட்சி:

இங்கிலாந்து தேசத்தில் சீர்திருத்த சபை தொடங்கிய ஆரம்ப காலத்தில் கிறிஸ்தவ பெற்றோரால் உண்மையாய் சாட்சியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழும்படி வளர்க்கப்பட்ட வாலிபன்தான் வில்லியம் ஹன்டர் என்ற வாலிபன். ஆவிக்குரிய பெற்றோர்களால் மெய்யான தெய்வ பக்தியுள்ள வழியில் வளர்க்கப்பட்டவன். ஒருநாள் லண்டனில் உள்ள எஸெக்ஸ் பட்டிணத்தில் உள்ள பிரென்ட் உட் என்னும் இடத்தில் உள்ள ஆலயத்துக்கு ஆராதனையில் கலந்துக்கொள்ள ஆலயம் தொடங்கும் முன்பே ஆலயத்திற்குள் சென்றுவிட்டான். அங்கு மேசையின்மீது வைக்கப்பட்டிருந்த வேத புத்ததத்தை கண்ட அவன் ஆவலோடு அதை திறந்து வாசிக்க ஆரம்பித்தான்.

அக்காலத்தில் திருச்சபை-நீதிமன்றத்துக்கு மரண தண்டனை தீர்ப்பு கொடுக்கும் அதிகாரம் இருந்தது. அந்த காலத்தில் வேதத்தை மிகமிக பரிசுத்த புத்தகமாக மாத்திரம், காட்சிபொருளாக மாத்திரம் வைத்திருந்தனர். திருச்சபை தலைவர்கள்,

குறிப்பிட்டவர்கள் தவிர வேறு யாரும் வேத புத்தகத்தை தொட்டுவிடகூடாது. அத்தனை பரிசுத்த புத்தகமாக மக்களை பயமுறுத்தி நம்ப வைத்திருந்தனர். இந்த வாலிபன் அன்று ஆலயத்துக்குள் இருந்த வேத புத்தகத்தை திறந்து வாசித்தான். வாசிக்க வாசிக்க அவனுள் சொல்லமுடியாத சந்தோஷம் பெருகியது. இச்சமயத்தில் திருச்சபை-நீதிமன்ற அதிகாரி ஒருவர் அநத பையன வேதபுத்தகத்தை கையால் தொட்டு திறந்து வாசிப்பதை பார்த்து அந்த புனிதமான புத்தகத்தை நீ எப்படி தொடலாம்?. இது பெரும் குற்றமாக சபை சட்டத்தில் எழுதப்பட்டுள்ளது. உடனே வில்லியம் ஹன்டர் திருச்சபை காவலாளர்களால் கைது செய்யப்பட்டான். அவனிடம் விசாரணை நடத்தப்பட்டது. அவனோ அந்த வேதம் வாசிக்க வாசிக்க மிக ஆறுதலாகவும். உலகில் வாழ பல நல்ல பரிசுத்த வழிகள் அதில் எழுதப்பட்டுள்ளதாகவும் ஆவிக்குரிய முன்னேற்றத்துக்காக நான அதை வாசித்தேன் என்றான்.

இனி நீ வேதத்தை தொடுவதோ, வாசிப்பதோ கூடாது என்று கண்டிப்பாக அவனுக்கு கட்டளையிட்டார். ஆனால் அந்த பையனோ சற்றும் பயப்படாமல் நான் உயிரோடு இருக்கும் காலம் வரை வேதத்தை எங்கிருந்தாலும் இரகசியமாக வாங்கி படிக்க புதிய தீர்மானம் எடுத்திருப்பதாகவும் அது என்னை பரிசுத்தமாகவும், உண்மையுள்ளவனாகவும் வாழவைக்க உதவும் என்று தான் நம்புவதாகவும் கூறினான்.

அவனின் தீர்க்கமான பதிலால் திருச்சபை தலைவர்கள் கோபமுற்று இவன் ஒரு கிறிஸ்தவ மத விரோதி என்று குற்றஞ்சாட்டி நீதிபதிமுன் நிறுத்தப்பட்டான். கிறிஸ்தவ சபைக்கு எதிரான வேத புரட்டன் என்று அவன்மேல் குற்றஞ்சாட்டப்பட்டு லண்டனிலிருந்து உயர் தலைவருக்கு அறிக்கை அனுப்பப்பட்டது. செயின்பால்ஸ் என்ற இடத்திலிருந்த கிறிஸ்தவ மத சம்பந்தமான நீதிமன்றத்துக்குமுன் அவன் ஆஜராக வேண்டும் என்று உத்தரவு இடப்பட்டது. இங்கு அவனை உயிரோடு எரிக்கப்படவேண்டும் என்றும் உடனே தீர்ப்பும் வழங்கப்பட்டது.

ஆனால அந்த பையனை பெற்ற தாயும் - தகப்பனும் ஜெயிலில் பார்க்க வரும்போதெல்லாம் தன் மகன் மன்னிப்பு கேட்டு மரண தண்டனையிலிருந்து தப்பிக்கும் ஆலோசனையை கூறாமல், மகனே நீ தொடங்கிய ஆவிக்குரிய ஜீவிய வழியிலேயே கடைசிவரை தொடர்ந்து நில் என்று அவன் சோர்ந்துபோகாதபடியும் மரணத்துக்கு அவனை ஆயத்தப்படுத்தும் வண்ணமாகவும் ஜெபம் செய்தார்கள். கிறிஸ்துவினிமித்தம் தன் ஜீவனையே இழக்க முன்வந்த தன் மகனுக்காக அந்த பெற்றோர் பெருமையடைந்து இப்படி ஒரு மகனை எங்களுக்கு கொடுத்தீரே என்று தேவனை துதித்ததை ஜெயில் அதிகாரிகள் கண்டு அதிசயித்தார்கள்.

அந்த வாலிபன் பெற்றோரிடம் கூறினான், அம்மா என்னை ஒரு மர கம்பத்தில் இருக்க கட்டி கீழே நெருப்பை எரிய விட்டு கொல்லப்போகிறார்கள். அந்த நெருப்பு சூடும், எரிச்சலும் கொஞ்சநேரம் மட்டும்தானே! அதற்குள் நான் மரித்து கர்த்தரின் சமூகத்தில்போய் சேர்ந்துவிடுவேன். வேதனையோ, எரிச்சலோ இல்லாத அந்த இடத்தில்போய் நிலையான பேரின்பத்தை அனுபவிப்பேனே! அப்படித்தானே நம் வேத புத்தகத்தில் எழுதியிருக்கிறது. கொஞ்சகாலம் பாடு அனுபவிக்கிறவர்கள் எனறு வசனத்தில் குறிப்பிட்டுள்ளதை ஞாபகப்படுத்தி மகன் பெற்றோரை ஆறுதல்படுத்தினான். அந்த கொஞ்சநேரம் அனுபவிக்கபோகிற நெருப்பின் வேதனைக்குபின் கிறிஸ்து எனக்கு மகிமையின் கிரீடத்தை வாக்கு பண்ணியிருக்கிறார் என்று எல்லோரிடமும் கூறி மகிழ்ந்தான்.

1555ம் ஆண்டு மார்ச் மாதம் 27ம் தேதி பொழுது விடிந்தவுடன் அவன் நண்பன் ஒருவன் ஜெயிலுக்கு வந்து அந்த வாலிபனைக்கண்டு பயப்படாதே என்று உனக்கு ஆறுதல் கூற வந்தேன் என்று மிகவும் துயரத்துடன் கூறினான். நான் எதற்கும் பயப்படவில்லை என்னை கடைசிவரைதாங்கக்கூடியஒன்றுஎன்இருதயத்தில்இருக்கிறதுஎன்று கூறினான். இதை கேட்ட அவன் நண்பன் அதற்குமேல் அவனிடம் பேசமுடியாமல் கதறி அழுதான்.

கொலைகளத்துக்கு அந்த வாலிபன் கொண்டுபோகப்பட்டான். அங்கே அடுக்கி வைக்கப்பட்டிருந்த விறகு கட்டைகளின்மேல் முழங்கால் படியிட்டான். அந்த வாலிபன் ஹன்டருடைய சொந்த சகோதரன். நல்ல விசுவாசி. அவன் அருகே நின்று மரணசோர்வு தம்பிக்கு உண்டாகாமல் இருக்க வசனங்களை ஞாபகப்படுத்திசொல்லி அவனை ஊக்குவித்தான். நெருப்பு பற்றவைக்கப்பட்டது. அப்போது உடனே அவன் சகோதரன் தம்பி.வில்லியம் திடன்கொள்! கர்த்தருக்கு ஸ்தோத்திரம் என்று மாத்திரம் சொல் என்றான். நெருப்பு கொழுந்துவிட்டு எரியும்போது அந்த வாலிபன் வில்லியம் கர்த்தாவே என் ஆவியை ஏற்றுக்கொள்ளும் என்றான். இதுவே அந்த வாலிபனின் கடைசி வார்த்தையாக இருந்தது. அந்த இரத்தசாட்சி பொறுமையுடனும் முறுமுறுப்பில்லாமலும் தைரியத்துடனும் தன் ஜீவனை விட்டான்.

பின்பு மார்ட்டீன் லூத்தர் போல சிலர் வேதத்தை படித்து உண்மையை தெரிந்து மற்றவர்களுக்கு அதை அறிவித்தததால்தானே புரட்சி வெடித்தது, புராட்டஸ்ட்ன்ட் உருவானது. ஆகவே வேதத்தை தொட்டால் தண்டனை, படித்தால் மரணதண்டனை எனறு மக்களை பயமுறுத்தி வைத்திருந்த காலம் அது.

ஆனால் இன்றைக்கு விலை அதிகம் கொடுத்து விலை உயர்ந்த வேத புத்தகத்தை வாங்கி அதை வாசிக்க மனமில்லாமல் இருந்தால், இன்றே வேத வாசிப்புக்கு அர்ப்பணிப்போம்!